# 13 ஆவது திருத்தச் சட்டம் வேண்டுமா? இல்லையா?

## யோசனையை முன்வைக்க இரண்டு வார அவகாசம்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நாடாளுமன்றம் தீர்மானம் எடுக்கும் வகையிலான அதிகாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார். அதற்கேற்ப, கட்சித் தலைவர்கள் அவர்களது யோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் இருப்பது ஜனாதிபதியாகிய என்னிடமல்ல, நாடாளுமன்றத்திடம்!, என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சிக் கூட்டத்தில் கூறியிருந்தார்.

அதன்படி 13 ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பான பொறுப்பு எம்.பிக்களின் கைகளுக்கு வந்துள்ளது.

இதை நடைமுறைப்படுத்துவது தொடர்பான யோசனையை முன்வைப்பதற்குக் கட்சித் தலைவர்களுக்கு இரண்டு வார கால அவகாசத்தை ஜனாதிபதி வழங்கியுள்ளார். பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான அமைச்சரவை உப குழு, அந்த யோசனையை ஆராய்ந்து பார்த்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று தெரிகிறது. (க. 03)


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 15 செவ்வாய்க்கிழமை 01.08.2023 கதிர் 41



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## இன அழிப்பு இராணுவமே வெளியேறு! தையிட்டியில் இன்றும் போராட்டம்



யாழ்ப்பாணம் - தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரண்டாவது நாளாகவும் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றக் கோரி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று மாலை ஆரம்பித்தது.

குறித்த போராட்டம் காரணமாக அப்பகுதியில், இலங்கைப் பொலிஸார் பெருமளவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தின்போது, இன அழிப்பு இராணுவமே வெளியேறு, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், தையிட்டி மண் தமிழர் சொத்து, சட்ட விரோத திஸ்ஸ விகாரையை இடித்து அகற்று!, போன்ற கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை ஆரம்பமான கவனவீர்ப்புப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், பிரசார செயலாளர் காண்டீபன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்ற வேண்டுமென வலியுறுத்தி கடந்த மே மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## வடிகானில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட 70 வயது முதியவர்

களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த நோயாளி ஒருவர் இன்று காலை அருகில் இருந்த வடிகானில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெற்கு களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் 70 வயதுடையவர் என்பதுடன், அவர் தொடர்பான வேறு தகவல்கள் எதுவும் இன்னும் வெளியாகவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2➤

## மாகாணசபைத் தேர்தலை நடத்த தமிழ்த்தேசியக் கட்சிகள் கோரிக்கை


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இன்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும், என தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்திய உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதிகாரப் பகிர்வு, உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டதாக 2➤

## மொட்டுவின் முக்கியஸ்தர்களுக்கு அமைச்சுப் பதவி இல்லாவிட்டாலும்

### ரணிலைப் பாதுகாக்கப் பஸில் முடிவு



அமைச்சுப் பதவிகள் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதிப் பதவியில் வைத்துப் பாதுகாக்க வேண்டும், என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச முடிவு எடுத்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் பஸிலுக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. 2➤

## சர்ச்சைக்குரிய சுற்றறிக்கை திரும்பப் பெறப்படமாட்டாது!

### சுகாதாரத்துறைச் செயலாளர்

ஊடகங்களுக்கு தகவல்களை வெளியிட வேண்டாம்!, என அரச ஊழியர்களுக்கு அறிவுறுத்தி வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை எக்காரணம் கொண்டும் மீளப்பெறப்பட மாட்டாது, என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திர குப்த திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

சுற்றறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த வாரம் பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக சுகாதாரத் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ள சூழ்நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், ஸ்தாபன சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால் சுற்றறிக்கையை மீளப்பெற வேண்டிய அவசியம் இல்லை, என வலியுறுத்தினார்.

சுகாதாரத் துறையில் ஏற்படும் சம்பவங்கள் தொடர்பாக சமூக ஊடகங்களில் தவறான தகவல்கள் பரவி வருவதால், ஊடகங்கள் அல்லது பொதுமக்களுக்கு உத்தியோகபூர்வ தகவல்களை வெளியிடும்போது அரசு ஊழியர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.



இவ்வாறான ஒரு சுற்றறிக்கையை வெளியிடும் முடிவை சுகாதார நிபுணர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் கடுமையாகச் சாடியுள்ளன. (மி)

## வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் கொழும்பு தூதரக அதிகாரிகள் சந்திப்பு!

வடக்கு, கிழக்குப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் கொழும்பு தூதரக அதிகாரிகள் சிலர் இன்று சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக தங்களுடைய உறவுகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள், சர்வ தேச விசாரணையை வலியுறுத்தியே தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

இலங்கை அரசானது தங்களுக்கு தீர்வை வழங்காத நிலையில், தமக்கான நீதியினைப் பெற்றுத்தர வலியுறுத்தி அவர்கள் இன்று கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளைச் சந்தித்து தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# கடலரிப்பைத் தடுக்கக் கருங்கற்கள் அப்பகுதிக்கு வருவோருக்கு ஆபத்து?



( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட பாரிய கடலரிப்பைக் கட்டுப்படுத்துமுகமாக பாரிய கருங்கற்கள் போடப்பட்டுள்ளன.

குறிப்பாக, திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் முன்புறம் உள்ள கடற்கரைப் பகுதியில் இக்கருங்கற்கள் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை ஆலய வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தற்போது திருவிழாக்கள் நடைபெற்று வருகின்ற நிலையில், திருவிழாவிற்குச் செல்வோர் குழந்தைகளை கடற்கரைப் பகுதிக்குக் கொண்டு செல்லவேண்டாம், என ஆலய நிர்வாகமும் பொலிசாரும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

குறிப்பாக தீர்த்தம் ஆடும் வேளையில் மிகவும் அவதானமாக, கவனத்துடன் செயற்படவேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

மீறினால், மிகவும் கூர்மையான பகுதிகளைக் கொண்டுள்ள குறித்த கருங்கற்களால் ஆபத்தைச் சந்திக்க வேண்டி நேரிடும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

# வவுனியா சிறையில் கைதிகளுக்குச் சின்னம்மை 14 நாட்களுக்கு உறவினர்கள் பார்வையிடத் தடை!

வவுனியா, ஒக். 01

வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்குச் சின்னம்மை நோய் ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், 14 நாட்களுக்கு உறவினர்கள் கைதிகளைப் பார்வையிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (03)

# திருகோணமலையில் படகு தீக்கிரை!

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலங்கைத் துறைமுகத்துவாரம் பகுதியில் மீன்பிடிப் படகொன்று இனம் தெரியாத நபர்களால் தீயிட்டுப் கொளுத்தப்பட்டு முழுமையாக சேதமடைந்துள்ளதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் மூலம் படகின் உரிமையாளர் பல லட்சம் ரூபாய் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை ஈச்சிலம் பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (து)

# சிறுத்தைக் குட்டிகளின் இருப்பிடங்களை குழப்பவேண்டாம்! - வனவிலங்குத் துறை

மத்திய மலையகத்தின் புதர்க் காடுகளில் காணப்படும் சிறுத்தைக் குட்டிகளின் இருப்பிடத்தில் குழப்பமேற்படுத்தவோ, அல்லது அவற்றின் இருப்பிடங்களை மாற்றவோ வேண்டாம், என வனஜீவராசிகள் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், உணவு தேடிச் செல்லும் சிறுத்தைப்புலிகள் தங்கள் குட்டிகளை தாம் திரும்பி வரும்வரை பேருந்துகளுக்கு அடியில் மறைத்து வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளன.

சிறுத்தைப்புலிக்கு அருகில் அடிக்கடி சென்றால், ஏதேனும் ஆபத்து நேரிடலாம். குட்டிகளை நெருக்கமாகச் சென்று புகைப்படம் எடுக்கவும் முயற்சிக்க வேண்டாம், என்று மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

குட்டிகளை எடுத்துக் கைகளால் கையாளமல் அவற்றிலிருந்து விலகிச் செல்லவேண்டும். ஏனெனில், மனிதர்களின் வாசனை தென்பட்டால், குட்டிகளை எடுத்துச் செல்ல சிறுத்தை மறுக்கும்.

சிறுத்தைக் குட்டிகளைக் கண்டால், திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1992 அல்லது அருகிலுள்ள வனவிலங்குப் பாதுகாப்பு அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரியப்படுத்துங்கள், என்றும் அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள சமுர்த்தி பெறுனர்களுக்கும் நலன்புரி கொடுப்பனவு

அஸ்வெசும நலன்புரித் திட்டத்திற்கு பொருத்தமற்றவர்கள் என தகுதி நீக்கம் செய் யப்பட்ட 393,094 சமுர்த்தி பெறுனர்களுக் கும் தொடர்ந்தும் சமுர்த்தி நலன்புரிக் கொடுப் பனவுகளை வழங்க அமைச்சரவை அங் கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சரவை இதற்கு அங்கீகாரம் வழங்கியதாக இராஜாங்க அமைச் சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது சமுர்த்தி உதவித்தொகை பெறும்1,280,000 குடும்பங்கள் நலன்புரி உதவிகளுக்காக விண்ணப்பித்து உள்ளதாகவும், அதில் 887,653 குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத் திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைப் பரிசீலிக்கும் நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வரு வதாகவும், அது நிறைவடைந்தவுடன் புதிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நட வடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், அஸ்வெசும நலன்புரி உதவிகள் வழங்குவதற்காக இதுவரை சுமார் 10 லட்சம் வங்கிக் கணக்குகளின் விவரங்கள் நலன்புரி நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், சமூக நலப் பலன்களைப் பெறத் தகுதியுடையவர்கள் விரைவில் கணக்குத் தொடங்கி நன்மைகளைப் பெறுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதற்காக, பொது விடுமுறை நாட்களிலும் அரசு வங்கி அமைப்பு இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (கோ)

# விமானத்துறைச் சேவைகள் வழங்கப்பட்ட அங்கீகாரம்!

இந்தியாவின் கொச்சி சர்வதேச விமான நிலையம் மற்றும் இந்தோனேசியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையங்களில் ஸ்ரீலங்கன் விமான நிறுவன விமானங்களுக்கான சேவைகளைப் பெற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தினால் இந்தியாவின் கொச்சி மற்றும் இந்தோனேசியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையங்களில் விமானப் பயணிகள் மற்றும் நடமாடும் விமான மின்னுயர்த்தி மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கல்கள் போன்ற பிரிவுகளுக்காக சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்வதற்கான விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் சேவை வழங்கல் ஒப்பந்தத்தை ஏஜ எயார்போர்ட் சேர்விசஸ் லிமிட்டடிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தோனேசியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையத்தில் சேவை வழங்கும் ஒப்பந்தம் பி.ரி. கபுர அங்கச என்ற நிறுவனத்திற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க)

# கொழும்பு விபத்தில் தமிழ் இளைஞர் சாவு

கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இரத்மலானையில் நேற்று திங்கட்கிழமை இரவு 8.30 மணியளவில் கார் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது காரைச் செலுத்திச் சென்ற 28 வயதுடைய செல்வராசா கஜேந்திரன் என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த குறித்த இளைஞர், பெற்றோருடன் தெஹிவளையில் வசித்து வந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. காரில் அவர் மாத்திரமே பயணித்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரவூர்தியின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (03)

## வடிகானில் இருந்து சடலமாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர் நேற்றுமுன்தினம் களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு வெளிநோயாளர் சிகிச்சைக்காக வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (து)

## மாகாணசபைத் தேர்தலை நடத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன், த.கலையரசன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணிக் கும், இந்திய தூதுவருக்கும் இடையிலும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

## மொட்டுவின் முக்கியஸ்தர்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்கள் பத்துப் பேருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காமல் ஜனாதிபதி இழுத்தடித்து வருகின்றார். இதனால், மொட்டுக் கட்சியினர் ரணிலுடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எனினும், அமைச்சுப் பதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ரணிலை ஜனாதிபதிப் பதவியில் வைத்துப் பாதுகாப்பதன் மூலம்தான் மொட்டுக் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்ற நிலை இருப்பதால், பஸில் மேற்படி முடிவை எடுத்துள்ளார் என்று அறியமுடிகின்றது. (03)

# நெல்லுக்கு அரசு செலுத்தும் தொகை திருப்திகரமாக இல்லை! – நாமல்



கொழும்பு, ஓக். 01

வறட்சியான காலப்பகுதியில் அர சாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்யும் விலை திருப்திகரமாக இல்லை எனச் சுட்டிக்காட்டிய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, இது தொடர்பாக ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக் குழு விரைவில் அர சாங்கத்தின் உயர்மட்டத்திற்கு எடுத் துச் சொல்லும் என்றார்.

நெல் விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் விளை பொருட்களை அரசே கொள் முதல் செய்கிறது.

இருப்பினும், அவர்களுக்கு வழங் கப்படும் விலை திருப்திகரமாக இல்லை. அடுத்த முறை ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக் குழு கூடும் போது இந்த விவகாரம் குறித்து விவாதிப்போம், என ஹிரியாலவில் நடைபெற்ற ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் நாமல் தெரிவித்தார்.

அஸ்வெசும தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் தலையிட்டோம். அது தொடர்பான விடயங்கள் மீளாய்வு செய்யப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது. அவ்வாறே நாம் இந்த விடயம் தொடர்பிலும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம், என்றும் அவர் மேலும் கூறி னார்.

மக்கள் சார்பாக நாங்கள் எப்போ தும் தலையிடுவோம்!, என்றும் அவர் தெரிவித்தார். (மி)

## தமிழ்ச்சங்க பெயர்ப்பலகை திறந்து வைப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்திற்குச் சொந்தமான களுவாஞ்சிக்குடிக் காணியில் தமிழ்ச்சங்க பெயர்ப்பலகை தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சித மூர்த்தி தலைமையில் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் வரலாறும் தமிழ்ச் சங்கத்திற்கு சொந்தமான காணி பற்றிய வரலாற்றுத் தகவல்களும் மிகவும் தெளிவான வகையில் சபையோருக்கு தலைவரினால் எடுத்துரைக்கப்பட்டன.

அதேவேளை, அமரர் ஆறுமுகம் தொண்டமான் அவர்களின் ஜனன சிரார்த்த தின ஞாபகார்த்தக் கட்டுரை மற்றும் கவிதைப் போட்டியில் பங்குபற்றி பரிசுபெற்ற மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கலாபூசணம் கா.சிவலிங்கம் அவர்களை மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தால் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க பொதுச்செயலாளர் சட்டத்தரணி மு.கணேசராசா உரையாற்றியதைத்தொடர்ந்து சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் சார்ந்த கருத்துக்கள் தமிழ்ச்சங்கத்திற்கு சொந்தமான களுவாஞ்சிக்குடி காணியை பராமரித்தல், வினைத்திறன் கொண்ட செயற்பாட்டிற்கு அதனை எவ்வாறு பயன்படுத்தல் என்பன தொடர்பான கருத்துக்கள் செயற்குழு உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டன.

அவ்வகையில் குறித்த காணியில் தமிழ்ச்சங்கச் செயற்பாட்டின் இயங்குநிலைக்காக சபையோரால் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன.

## பேருந்து பள்ளத்தில் விழுந்து விபத்து - 18 பேருக்கு காயம்

கொழும்பு - ஹட்டன் பிரதான வீதியில் இன்று அதிகாலை பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்ததில் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

வட்டவளை சிங்கள வித்தியாலயத்திற்கு அருகில் இன்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பயணிகள் பேருந்து ஒன்று எதிர்த்திசையில் இருந்து வந்த பேருந்து ஒன்றுக்கு பாதையை விட்டுக்கொடுக்க முற்பட்டபோது வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

காயமடைந்த பயணிகள் வட்டவளை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், பலத்த காயமடைந்தவர்கள் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்த போது, பேருந்தில் குறைந்தது 100 பயணிகள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (மி)

## வவுனியா இரட்டைக்கொலை ஐந்து சந்தேகநபர்கள் கைது!

வவுனியா, தோணிக்கல்லில் இடம்பெற்ற வாள் வெட்டு மற்றும் வீடெரிப்பு தாக்குதலால் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒரு வாரத்தின் பின்னர் 5 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வீடு புகுந்த குழுவொன்று வீட்டு உரிமையாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன் பெற்றோலை ஊற்றி வீட்டுக்குத் தீயிட்டது.

இந்தச் சம்பவத்தில் மூச்சுத் திணறல் காரணமாக 21 வயது இளம் குடும்பப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் 10 பேர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அதில் எரிகாயங்களுக்குள்ளான இளம் குடும்பப் பெண்ணின் கணவனும் பின்னர் உயிரிழந்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொழும்பிலிருந்து வருகைதந்த பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. பலரிடமும் வாக்குமூலங்களும் பெறப்பட்டிருந்தன.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த 5 பேரைச் சந்தேகத்தில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் மேலதிக விசாரணைக்காகக் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (03)

## பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் - வாழ்வும் பணியும் நூல் வெளியீட்டு விழா தென்கிழக்கு பல்கலையில் இடம்பெற்றது

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் ஏற்பாட்டில் 'பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் – வாழ்வும் பணியும்' நூல் வெளியீட்டு விழா நேற்று திங்கட்கிழமை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்ப பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கை அறபு மொழி பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் எம்.எஸ்.எம்.ஜலால்தீன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ்பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். வெளியீட்டுரையை பேராசிரியர் எம்.பி.எம்.இஸ்மாயிலும், நூல் அறிமுக உரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸிலும் நிகழ்த்தினர்.

விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக் கவிதை வழங்கலுடன், பிரதம அதிதி மற்றும் சிறப்பதிதி ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.



இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பீடாதிபதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், நூலகர், ஊவா வெல்லச பல்கலைக்கழக பதிவாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர்கள், பேரவை உறுப்பினர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரீ. ஹசன் அலி, இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## சுகாதாரத் துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஆளுநர் செந்தில் தொண்டமான் கவனத்திற்கு





(நூருல் ஹுதா உமர்)

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கிழக்கு மாகாணத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் வைத்து நடைபெற்ற இந்தச் சந்திப்பில், வைத்தியர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் குறித்து ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட விடயங்களை கேட்டறிந்த ஆளுநர் செந்தில் தொண்டமான், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு மாகாண சபை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# கைவைத்தால் கடும் நடவடிக்கை வரும்! நைஜர் நாட்டுக்கு பிரான்ஸ் எச்சரிக்கை



பிரெஞ்சுக் குடிமக்கள் அல்லது அவர்கள் தொடர்பிலான விடயங்கள் மீது கைவைத்தால் உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என நைஜர் நாட்டுக்கு பிரான்ஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமீபத்தில் நைஜர் ஜனாதிபதியாக இருந்த முகமது பாசுமின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, இராணுவ ஜெனரலான அப்துரஹமானே டிசியானி தன்னை நைஜரின் ஆட்சியாளராக அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து, அந்த நாட்டுக்கு வழங்கிவந்த நிதியுதவியை பிரான்ஸ் நிறுத்தியது. ஆகவே, கோபமடைந்த போராட்டக்காரர்கள் நைஜரிலுள்ள பிரெஞ்சுத் தூதரகத்துக்கு முன்னர் கூடி, கோஷங்கள் எழுப்பினர். புடின் வாழ்க என்றும், பிரான்ஸ் ஒழிக என்றும் அவர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அதைத் தொடர்ந்து, பிரெஞ்சுக் குடிமக்கள் அல்லது அவர்கள் தொடர்பிலான விடயங்கள் மீது கைவைத்தால் உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நைஜர் நாட்டுக்கு பிரான்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன், பிரான்ஸ் மக்கள் மற்றும் பிரான்ஸ் தொடர்பான எந்த விடயங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதை சகித்துக்கொள்ளமாட்டார் என்றும், பிரான்ஸ் தூதரக அலுவலர்கள், இராணுவத்தினர் மற்றும் பிரான்ஸ் தொழிலகங்கள் ஏதாவது தாக்குதலுக்குள்ளானால், தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மகாராஷ்டிராவில் ராட்சத இயந்திரம் விழுந்து பலர் பலி

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்துக்கு அருகே ஷாபூர் பகுதியில் சம்ருத்தி எக்ஸ்பிரஸ் சாலையின் மூன்றாம் கட்டப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் பிரம்மாண்ட கிர்டர் இயந்திரம் ஒன்று சரிந்து பாலத்தின் மீது விழுந்துள்ளது. இதில் அங்கு வேலை பார்த்து கொண்டிருந்த தொழிலாளர்கள் பலர் சிக்கி கொண்டனர்.

தகவலறிந்து விரைந்த பொலிசார் மற்றும் தீயணைப்புப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

ஆயினும், 16 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கிப் பலியானதாக முதல் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களது உடல்கள் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் 3 பேர் காயமடைந்து அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 6 பேர் ராட்சத இயந்திரத்திற்கு அடியில் சிக்கிக் கொண்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. அவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. தற்போது இந்தியத் தேசிய பேரிடர் மீட்பு படையினர் விபத்து நடந்த இடத்தில் மீட்பு பணிகளை முடுக்கி விட்டுள்ளனர். (கோ)

# உக்ரைன் ஜனாதிபதியின் சொந்த ஊர் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்



கடந்த சில தினங்களுக்கு முன் உக்ரைன் இராணுவம் ரஷ்யாவின் மொஸ்கோ நகர் மீது ட்ரோன்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியது.

இதைற்குப் பதிலடியாக, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் சொந்த ஊரில் அமைந்துள்ள அடுக்குமாடிகள் கொண்ட குடியிருப்புக் கட்டிடத்தின் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்து, 75க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என உக்ரைன் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவின் எல்லைக்குள் போர் நுழைந்து விட்டது, என ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்த மறுநாளில் ரஷ்ய இராணுவம் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கோ)



# இசைக்கருவிகளுக்கு தீயிட்ட தாலிபான்கள்!

பொது இடங்களில் இசையை இசைப்பதற்கான தடை உட்பட பல கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்துள்ளதோடு, பல்வேறு பகுதி-களில் செயல்பட்டு வந்த இசைப் பாடசாலைகளையும் மூடுமாறு உத்தரவிட்டிருந்தனர்.

இந்த நிலையில், மேற்கு ஹெராத் மாகாணத்தில் பொதுமக்கள் பயன்படுத்தி வந்த இசைக்கருவிகளைக் கைப்பற்றிய தாலிபான்கள், அவற்றைத் தீ வைத்து எரித்துள்ளனர்.

அதற்கு விளக்கமளித்த தலிபான்கள், இசையால் இளைஞர்கள் வழிதவறிச் செல்வதாக தெரிவித்துள்ளனர். (மி)



# நாயாக மாறிய ஜப்பானிய நபர்

ஜப்பானிய நபர் ஒருவர் சுமார் 20,000 அமெரிக்க டொலர்களைச் செலவிட்டு, தம்மை ஒரு நாய் போன்று உருமாற்றிக் கொண்டுள்ளார்.

தனது அடையாளத்தை வெளிப்படுத்த மறுத்துள்ள அந்த நபர், கடந்த ஆண்டு இது தொடர்பாக ஓர் அறிவிப்பை வெளியிட்டு, ஊடக வெளிச்சத்தைப் பெற்றார். அத்துடன், நாய் போன்ற உடைகளை வடிவமைக்க, நிறுவனம் ஒன்றையும் ஏற்பாடு செய்தார்.

டோகோ என தம்மை அறிமுகம் செய்துள்ள அந்த நபர், முதன்முறையாக நாய் போன்ற வேடத்தில் தெருவில் சென்ற சம்பவத்தைப் பதிவு செய்து, தனது சமூக ஊடக பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

அதில், தமது சிறுவயதுக் கனவை தற்போது நிறைவேற்றியுள்ளதாகவும், ஒரு மிருகமாக மாற வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு எனவும் டோகோ தெரிவித்துள்ளார்.

அந்தக் காணொளியில், வளர்ப்பு நாய்களுடன் செல்லும் மக்கள் டோகோ உடன் உரையாடுவதும், சிலர் புகைப்படம் எடுத்துக் கொள்வதும், சிலர் பாசமாக டோகோவின் முதுகில் தட்டுவதுமாக உள்ளனர். தனது அடையாளத்தை வெளிப்படுத்த மறுக்கும் டோகோ, மக்கள் தன்னை அடையாளம் கண்டுபிடித்துவிடுவார்கள் என்ற பயம் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனது பொழுதுபோக்குகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற தேவை இல்லை. அதுவும் தாம் பணியாற்றும் சக ஊழியர்களுக்கு தெரியவேண்டிய தேவையில்லை, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் செப்பேட் நிறுவனம் சுமார் 40 நாட்கள் எடுத்துக்கொண்டு, 15,000 டொலர் செலவில் டோகோ விரும்பிய வகையில் நாய் உடையை வடிவமைத்து கொடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (கோ)

# இந்திய துப்புரவு பணியாளர்களுக்கு அடித்த 100 மில்லியன் ரூபா ஜாக்பொட்



கடந்த ஜூன் மாதம், தென்னிந்திய மாநிலமான கேரளாவைச் சேர்ந்த 11 பெண் துப்புரவுப் பணியாளர்கள், அதிர்ஷ்ட இலாபச் சீட்டை வாங்கியதன் மூலம் கடந்த வாரம், அவர்களுக்கு 100 மில்லியன் ரூபா ஜாக்பொட் தொகை கிடைத்துள்ளது.

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள பரப்பனங்காடி நகரில் உள்ள வீடுகளில் இருந்து மக்காத குப்பைகளைச் சேகரிக்கும் குறித்த பெண்கள், வழக்கமாக ஒரு நாளைக்கு 250 ரூபாவைக் கூலியாகப் பெறுகின்றனர்.

சம்பாதிக்கும் பணம் போதுமானதாக இல்லையெனவும், தங்கள் குழந்தைகளின் கல்வி மற்றும் இதர செலவுகளுக்கு கடன் வாங்கியுள்ளதாகவும் தெரிவித்த அவர்கள், அதனால்தான் எப்போதாவது சேர்ந்து அதிர்ஸ்ட இலாபச் சீட்டை வாங்குவதாகத் தெரிவித்தனர்.

பல இந்திய மாநிலங்களில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை சட்டவிரோதமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கேரளாவில் தனியார் அதிர்ஷ்ட இலாப நிறுவனங்கள் தடைசெய்யப்பட்டுள்ளபோதும், அரசாங்கமே மிகவும் பிரபலமான இத்திட்டத்தை நடத்துகிறது.

குறித்த பெண்கள் குழு, முன்னர் ஒருமுறை 1,000 ரூபாய் பரிசை வென்றதாகவும் அதனைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டதாகவும் தெரிவித்தனர்.

மேலும், இவ்வளவு பெரிய தொகையை வெல்வோம் என தாங்கள் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (மி)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2023இல் வெளியிடப்பெற்றது.